# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பொலிஸ்

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2007

இவ்வறிவித்தலில் "ஆணைக்குழு" என்னும் பதம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவைக் குறிக்கின்றது.

1. **பரீட்சை:**

1.1 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை ஒன்று கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

1.2 இப்பதவி நிரந்தரமானதாகும். பங்களிப்பு ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.

1.3 நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படும் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

1.4 தேசிய பொலிஸ் ஆணைக்குழு பொதுமக்களின் நன்மை கருதி இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படக்கூடாதென தீர்மானிக்கும் பட்சத்தில் பரீட்சை பின்போடப்படலாம் அல்லது இரத்துச் செய்யப்படலாம்.

2. **தகைமைகள்:**

2.1 பரீட்சார்த்தி-

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவு திகதியன்று 22 வயதுக்குக் குறையாத வராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(உ) விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும் ;

(ஊ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திரமான உடல் கட்டமைப்பையும் தேகாரோக் கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(எ) மூக்குக் கண்ணாடி அல்லது கொன்ராக் வில்லை எதுவுமில்லாமல் கண் பார்வை ஆகக் குறைந்தது 6/6 உம், 6/12 உம் இருக்க வேண்டுமென்பதுடன், நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும் ;

(ஏ) ஆண் பரீட்சார்த்திகள் 05' 06" க்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன் பெண் பரீட்சார்த்திகள் 05'4"க்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிகளாகவும் 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருக்கும் பொலிஸ் அலுவலர்கள் வேறு தகைமைகளில் தகுதி பெற்றிருந்தால் அவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரினூடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விவாகமான பொலிஸ் அலுவலர்களும் விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு 2.**- விளையாட்டுத் துறையில் நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தி இலங்கையில் அல்லது வெளிநாட்டில் சிறந்து விளங்கிய ஒரு விண்ணப்பக்காரர் மற்றெல்லாத் தேவைகளையும் திருப்திப்படுத்து மிடத்து உடல்சார் தேவைகளில் அரை அங்குலம் குறைவாக இருக்குமிடத்து அவரைத் தெரிவு செய்வதற்கான உரிமையை தேசிய பொலிஸ் ஆணைக்குழு தன்னகத்தே கொண்டிருக்கும்.

3. **சம்பள அளவுத் திட்டம்.**-2006.04.25 ஆந் திகதிய 6/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி எஸ்.எல். 1-2006 சம்பள அளவுத் திட்டம் ஏற்புடையதாகிறது. அதன்படி, மாதாந்த சம்பள அளவுத் திட்டம். ரூபா 22,935 -10 X 645-8 X 790-17X1,050 ரூபா 53,555 (ரூபா 24,870 க்கு முன்னர் தடைதாண் பரீட்சை)

4. **தெரிவு செய்யும் முறை.**- விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் முறை பின்வருமாறு :-

4.1 அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் பரீட்சை கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களில் விண்ணப்ப தாரர்கள் அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் பரீட்சைக்காக அழைக்கப்படுகின்றனர். இப்பரீட்சையின் போது-

(அ) உயரம் மற்றும் மார்பு சுற்றளவு (ஆண்) பரீட்சித்துப் பார்க்கப்படும்.

(ஆ) சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

4.2 *சகிப்புத் தன்மைக்கான பரீட்சை.*-அடிப்படைத் தகைமைகளால் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் அதன்பின்னர் சகிப்புத் தன்மைக்கான பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

பொலிஸ் மா அதிபரினால் தீர்மானிக்கப்படுகின்ற இடமொன்றில் ஆட்சேர்ப்புப் பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் இப்பரீட்சை நடாத்தப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் இப்பரீட்சைக்கு உட்படுவதற்குத் தகுந்த உடல் நலமுடையவர்களா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக பொலிஸ் ஆசுபத்திரியின் மருத்துவ அலுவலர் ஒருவரினால் பரீட்சைக்கு முன்னர் மருத்துவப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

*சகிப்புத் தன்மைக்கான பரீட்சை முறை.*-ஆண் பரீட்சார்த்தி ஒருவராயின் 03 நிமிடங்கள் 54 செக்கன்களிலும் பெண் பரீட்சார்த்தி ஒருவராயின் 05 நிமிடங்கள் 24 செக்கன்களிலும் 1000 மீற்றர் தூரமொன்றை தொடர்ச்சியாக ஓடுதல்.

**குறிப்பு 1.**-பொலிஸ் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே ஆட்சேர்ப்பு செய்யும் போது சகிப்புத் தன்மைக்கான பரீட்சையொன்றில் தோற்றியுள்ளதனால் மீண்டும் அத்தகைய பரீட்சையொன்றில் தோற்றுவதற்கு அவசியமாகாது.

